2014 ஜூலை 22]

சாலையிலே கல்லணை வரை 81 கோடி ரூபாய்க்கு புதிய இரண்டு வழிச் சாலைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலோரப் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் பாதுகாப்பு இல்லங்கள் தேவையா என்று ஆய்வு செய்வதாகச் சொன்னார்கள். கல்லணையிலே, 1924 ஆம் ஆண்டிலே 8–7–1961–லே மிகப் பெரிய வெள்ளமும், அதைவிட மிகப் பெரிய வெள்ளம், 13–11–1971–லேயும் ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெத்தினசாமி, சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: வெள்ளப் பெருக்குக் காலங்களில் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கல்லணைக்கு வந்து, மக்களைப் பாதுகாக்கின்ற வகையில், வெள்ளக் காலங்களில் அவர்கள் தங்குவதற்காக இங்கு இல்லங்களை அமைக்க வேண்டுமென்று அதிகாரிகளிடத்திலே அன்று ஆணையிட்டுச் சென்றார்கள். அதற்குப் பின்னாலே 22–11–2005 அன்று மிகப் பெரிய வெள்ளம், 17 அடி உயரத்திற்கு தண்ணீர் வந்தபோது, அந்தப் பகுதி மக்களையெல்லாம் பாதுகாப்பான மேட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று, தற்காலிகக் குடில் அமைத்து மக்களைத் தங்க வைத்து, 20 நாட்கள் அங்கே உணவு, உடை, மருத்துவ வசதிகளெல்லாம் செய்யப்பட்டன. ஆகவே, அந்தப் பகுதிக்கு அவசியம் பாதுகாப்பான கட்டடம் வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் பெருக்குக் காலங்களில் கரையோர மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்குத் தேவையான அரசுக் கட்டடங்கள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் அதிகம் உள்ளதால், புதிதாக பாதுகாப்புக் கட்டடங்கள் தேவை உள்ளதா என்பதை அரசு ஆய்வு செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருந்தேன். கடலோர

மாவட்டங்களுக்கு மாத்திரம் என்று சொன்னார். தமிழகக் கடலோர மாவட்ட மக்களுக்கு கடல் சீற்றம், சுனாமி, புயல் போன்ற பேரிடர்களால் ஏற்படும் பாதிப்பினைத் தணிக்கும்வகையில் ரூ.1,481 கோடி மதிப்பீட்டில் கடலோர பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம், அதாவது Coastal Disaster Risk Reduction Project உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்படும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 121 கடலோரப் பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், பாதுகாப்பு மையங்களுக்கான 50 கிலோ மீட்டர் நீளமுள்ள வழித்தடங்கள் அமைத்தல், 439 முன்னெச்சரிக்கை அறிவிப்புக் கருவிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், Tamil Nadu Disaster Management Authority மூலமாக இத்திட்டத்தின் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

முற்பகல் 11–10

மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் அமைந்த இந்த ஆணையத்தின்மூலம் பேரிடர்களால் ஏற்படும் இன்னல்களைக் கண்காணித்து, அவற்றைத் தணிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு பரவைத் தலைவர் அவர்களே, தேவைப்படுகிறபட்சத்திலே கடலோர மாவட்டங்கள் இல்லாத பகுதிகளுக்கு ஆங்காங்கே இருக்கிற அரசுக் கட்டடங்கள் போதுமானதாக இருக்கின்ற காரணத்தினாலே தற்போது அந்த நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

கூடுதல் கட்டடம்

***36797—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரிலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் நபார்டு வங்கியின்மூலம் நிதியுதவி பெற்று நிறைவேற்றப்படுகின்றன. திட்டம் 11–ன்கீழ் அரசாணை எண் 290, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12–11–2011–ன்படி 131 பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட ரூ.152.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.120.06 இலட்சம் மதிப்பீட்டில், 12 கூடுதல் வகுப்பறைகளும், ஓர் அறிவியல் ஆய்வுக் கூடமும், 4 கழிவறைகளும், குடிநீர் வசதியும் செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையினால் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கூடுதல் கட்டடம் மாணவிகளின் பயன்பாட்டுக்கு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்றல் தனக்காக வீசுவதில்லை, மேகம் தனக்காகப் பொழிவதில்லை, நதிகள் தமக்காக ஓடுவதில்லை, மலர்கள் தமக்காக மணம் வீசுவதில்லை. அதைப்போல தனக்காக வாழாமல், தமிழக மக்களுக்காக வாழ்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரிலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது 1,847 மாணவிகள் பயின்று வருகின்றார்கள். இப்பள்ளியானது கடந்த ஆண்டு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்ற பள்ளியாகும். ஆனால், இந்தப் பள்ளி அமைந்துள்ள மொத்தப் பரப்பு வெறும் 40 சென்ட் நிலம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பள்ளிக்குச் சென்று பார்க்கின்றபோது, மாணவிகள் மிகவும் நெருக்கமாக, ஒரு தேன் கூட்டில், தேனீக்கள் இருப்பதுபோல் அமர்ந்திருப்பார்கள். ஒரு முறை இந்தப் பள்ளிக்குச் சென்று நான் மாணவிகளிடம் கேட்கின்றபோது, எங்கள் பள்ளியில் Attention *உண்டு,* Stand at ease *இல்லை என்கின்ற வகையிலே கூறினார்கள்.*

இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதன் விளைவாக, இந்தப் பள்ளிக்கு மிக அருகிலே இருக்கக்கூடிய வரத்து வாய்க்கால், பாசனப் பரப்பு ஏதும் இல்லாத வீரண்ணன் குளம் என்கிற ஒரு குளத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்தை பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கி, அந்த இடத்தில் நபார்டு திட்டத்தின் மூலமாக 12 வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கழிவறைகள் உள்ளிட்ட புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஏற்கெனவே 40 சென்ட் நிலத்தில் அமைந்துள்ள அந்தப் பள்ளியானது ஊரின் மையப் பகுதியிலே இருக்கிறது. ஆனால், புதிதாகக் கட்டப்பட்டுள்ள அந்தப் பள்ளிக் கட்டடமானது சுமார் 800 மீட்டர் தூரம் தள்ளி அமைந்துள்ளது. இவ்வாறு இருக்கின்றபோது, நிருவாக ரீதியாக சிரமம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஏற்கெனவே இருக்கக்கூடிய பள்ளிக் கட்டடத்தைப் பள்ளிக் கல்வித்